## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure

## In the Court of the Judicial Magistrate No.II, Usilampatti.

Calendar
Miscellaneous
Summary Trial
Maintenance : **Case No.419/2014**
Deposition of witness for prosecution : **P.W.1.முத்துலட்சுமி**

Father's Name :

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of

**09.05.2018**

**மு.வி:**

நான் தற்போது உசிலம்பட்டி அனைத்து மகளீர் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். எதிரியை எனக்கு தெரியும். 23.08.2009ம் தேதி எழுமலை காவல் நிலையத்தில் முதல்நிலை காவலராக பணிபுரிந்தபோது காலை 8 மணிக்கு நானும் என்னுடன் பணிபுரிந்த 136 காவலர் திரு.செல்வம், பழனி 14வது சிறப்பு காவல் அணியை சேர்ந்த காவலர் திரு.சாக்ரடீஸ் என்பவர், காவலர் உத்தராஜ் ஆகியோர் விநாயகர் சதுர்த்தியை முன்னிட்டு எழுமலை பஸ் நிலையத்தில் பாதுகாப்பு பணியிலிருந்தபோது மாலை 6 மணிக்கு பின்னால் பெயர் விலாசம் கேட்டு தெரிந்த எழுமலையை சேர்ந்த சன்னாசி தேவர் மகன் பிச்சைமணி என்பவரும், ராஜாமணி என்பவரும், பார்த்தசாரதி என்பவரும் விநாயகர்சிலை அருகே உள்ள மகேந்திரன் புரோட்டா கடை முன்பு கையில் பீர் மற்றும் சோடா கண்ணாடிபட்டில்களை வைத்துக்கொண்டு ஒருவரை ஒருவர் மாற்றி மாற்றி அடித்துக்கொண்டு சத்தம்போட்டுக்கொண்டிருந்தார்கள். எதிரிகள் இருவரையும் சத்தம்போட்டு கலைந்துபோக நாங்கள் சொன்னபோது மேற்படி இருவரும் எங்களை பார்த்து போலீஸ்கார நாய்களா ஒழுங்கா போறீங்களா பாட்டிலை கொண்டு எறிந்து கொல்லவா என்று மிரட்டி தங்களை அரசு பணிசெய்யவிடாமல் தடுத்தன. இதனால் எங்கள் அரசு பணி பாதிக்ப்பட்டது. எதிரிகள் இருவரையும் நாங்கள் சத்தம்போட்டு போகச்சொல்லும்போது மீண்டும் பாட்டில்களை எங்கள் மீது எறிந்தார்கள். அதில் என்னுடன் இருந்த சாக்ரடீஸ் என்பவருக்கு வலது மார்பில் பட்டு உள்காயம் ஏற்பட்டது. அப்போது மகேந்திரன், புரோட்டா கடை உரிமையாளர் முருகன், அன்பகம் ஹோட்டல் உரிமையாளர் ராஜேந்திரன் ஆகியோர் எங்களுடன் சேர்ந்து

சத்தம்போட்டு கூட்டத்தை கலைந்து போகச்சொன்னார்கள். காயம்பட்ட காவலர் சாக்ரடீஸ் என்பவரை நான் அழைத்துக்கொண்டு எழுமலை காவல் நிலையம் வந்து நடந்த சம்பவத்திற்கு புகார் மனு கொடுத்தேன். புகார் மனு அ.சா.ஆ.1. சார்பு ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

கு.வி:

இல்லை.